அறிவாளி

# TNTET

## தாள்-II (கணக்கு மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கானது)

## முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் (விடைகளுடன்)

தொகுத்தவர்:
ம. செல்லமுத்து M.Sc., M.Ed., M.Phil.,
தலைமை ஆசிரியர் (ஓய்வு)

**கௌசெல்ராமு பதிப்பகம் பி.லிட்.**

**# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.**

**போன் : 044-26535245 ; அலைபேசி : 9176629095**

**மின்னஞ்சல் : kouselramu97@gmail.com ; வலை தளம் : www.arivali.in**

**விலை : ₹ 150**

வெளியிடுவோர்
**பா. அமுதா செல்லமுத்து**
கௌசெல்ராமு பதிப்பகம் பி.லிட்.
# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
தொடர்புக்கு : 044-26535245 ; 9176629095.

© உரிமை பதிப்பகத்தாருக்கு

முதல் பதிப்பு : நவம்பர் 2026

# முன்னுரை

அரசுப் பணியிலிருக்கும் மற்றும் அரசுப் பணியை எதிர்நோக்கி இருக்கும் கணக்கு மற்றும் அறிவியல் ஆசிரியர்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் தங்களை தகுதிப்படுத்திக் கொள்ள உதவும் வகையில் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்களில் பத்து வினாத்தாட்களைத் தொகுத்து விடைகளுடன் இங்குக் கொடுத்துள்ளோம்.

நூலின் நோக்கம், பயன்படுத்தும் வழிமுறைகள், வினாத்தாளில் இடம்பெறும் தேர்வர்களுக்கான குறிப்புகள், பயிற்சிக்காக மாதிரி OMR விடைத்தாள், தேர்வர்களுக்கு அடிக்கடி எழும் சந்தேகங்கள், அவற்றிற்கான விளக்கங்கள் ஆகியவையும் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் பணி – ஓர் உன்னதப் பணி

அதை அடைய – நின்னை நீ அற்பணி

முயன்று, பயின்று, வென்றிட வாழ்த்துக்கள்!

– பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்


| வினாத்தாள் | பக்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குழந்தை மேம்பாடு & கற்பித்தல் | தமிழ் | English | கணக்கு | அறிவியல் | விடைகள் |
| TNTET_தாள்-II_2026 | 1 | 7 | 11 | 14 | 18 | 179 |
| TNTET_தாள்-II_2025 | 22 | 27 | 31 | 34 | 37 | 180 |
| TNTET_தாள்-II_2022 (03-02-2023 FN) | 41 | 44 | 47 | 50 | 54 | 181 |
| TNTET_தாள்-II_2022 (12-02-2023 FN) | 58 | 61 | 64 | 67 | 71 | 182 |
| TNTET_தாள்-II_2019 | 75 | 78 | 82 | 85 | 89 | 183 |
| TNTET_தாள்-II_2017 | 94 | 97 | 100 | 103 | 107 | 184 |
| TNTET_தாள்-II_2014 | 111 | 114 | 117 | 120 | 123 | 185 |
| TNTET_தாள்-II_2013 | 127 | 130 | 133 | 136 | 140 | 186 |
| TNTET_தாள்-II_2012(RE) | 144 | 147 | 150 | 154 | 156 | 187 |
| TNTET_தாள்-II_2012 | 161 | 163 | 167 | 171 | 173 | 188 |
| தேர்வர்களுக்கான குறிப்புகள் | 189 | | | | | |
| மாதிரி OMR விடைத்தாள் | 191 | | | | | |

## நூலின் உள்ளே

- முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் – 10
  (வினாக்கள் பகுதிவாரியாக வரிசை மாற்றம் செய்யப் பட்டுள்ளன)
- நூலின் இறுதியில் விடைக்குறிப்புகள்
- வினாத்தாளில் இடம்பெறும் 'தேர்வர்களுக்கான குறிப்புகள்'
  (முந்தைய வினாத்தாள் ஒன்றிலிருந்து மாற்றம் இல்லாமல் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளது. தேர்வுத் துறையால் அவ்வப்போது மாற்றப்படலாம்).
- தேர்வு எழுதிப் பயிற்சி செய்ய மாதிரி OMR விடைத்தாள்

## மிக மிக முக்கியம்

- ஒரு தேர்வில் தகுதி பெற பாடஅறிவு மட்டும் போதுமானது அல்ல.
- முக்கிய பாடப்பகுதிகள், அவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்களின் தன்மை, அந்த வினாக்களை அணுகும் முறை, அதன் வழியே சரியான விடையைத் தேர்ந்தெடுக்கும் திறன், இவை அனைத்திற்குமான நேர மேலாண்மை, ஆகியவையும் மிக மிக அவசியம் ஆகும்.

## இந்த நோக்கத்தில்

- ஆசிரியர் தகுதித்தேர்வுக்கு தயாராகும் தேர்வர்கள்
- ஆசிரியர் பணியை இலக்காகக் கொண்டுள்ள ஆசிரியர்கள்
- சுயதேர்வு எழுதி தன்னை மதிப்பீடு செய்து கொள்ள விரும்புபவர்கள்
- முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்களில் பயிற்சி செய்ய விரும்புபவர்கள்

*ஆகியோருக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

## சந்தேகங்களும் – விளக்கங்களும்

- *தேர்வில் தகுதியடைய இந்த ஒரு நூல் மட்டும் போதுமானதா ?*

  நிச்சயமாக இல்லை. இந்த நூல், படிக்கவேண்டிய பாடப் பகுதிகளைத் தேர்ந்தெடுக்க உதவும் ஒரு வழிகாட்டி மட்டுமே.

- *6 முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள பாட நூல்களை படித்தால் போதுமானதா ?*

  "குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்" பகுதியைத் தவிர மற்றப் பகுதிகளுக்குப் போதுமானது.

- *மேற்கண்ட பாட நூல்கள் போதுமானது எனில் இந்த நூல் எங்களுக்கு எந்த வகையில் உதவும் ?*

  பாடப்பகுதி எவ்வாறு வினாக்களாக மாற்றப்படுகிறது என்பதை இந்த நூலில் உள்ள வினாத் தாட்களிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

- *"குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்" பகுதிக்கு எவ்வெவற்றை படிக்க வேண்டும் ?*

  "கண்டதைப் படித்தால் பண்டிதன் ஆகலாம்". எவ்வளவு அதிகமானப் பகுதிகளைப் படித்தாலும் தேர்வின்போது நேர்மறையான மனநிலையோடு (Positive Attitude) அணுகினால் மட்டுமே சரியான விடையைக் கண்டறிய இயலும்.

- *மேற்கண்டவாறு படித்தவையும் அறிந்தவையும் போதுமானதா ?*

  இல்லை. படித்தவற்றை தேர்வு எழுதி பயிற்சி செய்ய வேண்டும். அப்படி பயிற்சி செய்ய இந்த நூல் உதவியாக இருக்கும்.

- *தேர்வை சாதாரண வெள்ளைத்தாளில் எழுதலாமா ?*

  தேர்வை OMR விடைத்தாளில் எழுதுவது நல்லது.

- *OMR விடைத்தாளில் தேர்வு எழுதுவதன் நன்மை என்ன ?*

  அரசுத் தேர்வு எழுதுவதற்கு உண்மையாகவே எவ்வளவு நேரம் ஆகும் எனக் கணக்கிட முடியும்.

♦ *OMR விடைத்தாள் எங்கு கிடைக்கும் ?*

இந்த நூலில் இறுதியில் மாதிரி OMR விடைத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தேவையான எண்ணிக்கையில் நகல் எடுத்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். எங்களது வலைதளத்தில் (www.arivali.in) இருந்தும் pdf ஆகப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

♦ *பயிற்சித் தேர்வுகளுக்கான ஆலோசனை என்ன ?*

☞ உங்களுக்கு வேலைகள் மிகுந்து இருந்தாலும் ஒரு முழுத்தேர்வுக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

☞ தேர்வைத் தொடங்கி இடைநிறுத்தம் இல்லாமல் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும்.

☞ நூலின் இறுதியில் உள்ள விடைக் குறிப்போடு ஒப்பிட்டு உங்களது மதிப்பெண்ணைக் கணக்கிட வேண்டும்.

☞ தவறாக விடையளிக்கப்பட்ட வினாக்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

☞ அவை சார்ந்த பாடப்பகுதிகளை மீண்டும் படிக்க வேண்டும்.

☞ மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி மீண்டும் மற்றொரு தேர்வை எழுத வேண்டும்.

**இவ்வாறாக தொடர் பயிற்சி மிக மிக அவசியம்.**

**TNTET தாள்-II தேர்வுக்கான தமிழ், English, குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல், கணக்கு மற்றும் அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கான தனித்தனி நூல்கள் பாடவாரியாக எளிய வடிவில் தயாராகி வருகின்றன. விரைவில் அவை வெளிவர உள்ளன. எங்களது வலைதளத்தை (www.arivali.in) தொடர்ந்து கவனித்து வந்தால் அவற்றை நீங்கள் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.**

## TNTET_2026_தாள்-II_முழு வினாத்தாள் (கணக்கு & அறிவியல்)



### குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்

1. கீழே இரண்டு **கூற்றுகள்** தரப்பட்டுள்ளன:
**கூற்று I:**
தொடர்ச்சியற்ற கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளும் கோட்பாடுகள், வளர்ச்சி நிலைகளில் நடைபெறுவதாகக் கருதுகின்றன.
**கூற்று II:**
குறிப்பிட்ட காலத்தில் நிகழும் சிந்தித்தல், உணர்தல் மற்றும் நடத்தை தரம்சார்ந்த மாற்ற நிலைகளின் குணங்களாகும்.
மேலே உள்ள **கூற்றின்** அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:
(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் சரி
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் தவறானவை
(C) **கூற்று I** சரி ஆனால் **கூற்று II** தவறானது
(D) **கூற்று I** தவறானது ஆனால் **கூற்று II** சரி

2. **பட்டியல்-I** ஐ **பட்டியல்-II** உடன் பொருத்துக:

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| எதிர்வினை | | செயல்பாடுகள் | |
| (a) | கண் சிமிட்டல் | (i) | உணவளிக்க அனுமதிக்கிறது |
| (b) | வேரூன்றல் | (ii) | குழந்தை தாயிடம் ஒட்டிக் கொள்ள உதவுகிறது |
| (c) | உறிஞ்சல் | (iii) | குழந்தைகளுக்கு முலைக்காம்பு கண்டுபிடிக்க உதவுகிறது |
| (d) | மொரோ | (iv) | குழந்தைகளை வலுவான தூண்டுதலில் இருந்து பாதுகாக்கிறது |

மேலே உள்ள **கூற்றுகளின்** அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் **பொருத்தமான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:
(A) (a)-(i), (b)-(iii), (c)-(ii), (d)-(iv)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

3. பியாஜெட்டின் உணர்ச்சி இயக்க நிலைகளின் துணை நிலைகளை காலவரிசையில் ஒழுங்கமைக்க:
(a) இரண்டாம் நிலை சுழற்சி எதிர் வினைகளின் ஒருங்கிணைப்பு
(b) முதன்மை சுழற்சி எதிர்வினைகள்
(c) பிரதிபலிப்பு வடிவமைப்பு
(d) இரண்டாம் சுழற்சி எதிர்வினைகள்
**சரியான** விடையை தேர்ந்தெடுக்க:
(A) (a), (b), (c), (d)
(B) (b), (a), (c), (d)
(C) (c), (b), (d), (a)
(D) (d), (a), (c), (b)

4. **அனுமானம் (A):**
ஜீன் பியாஜெட் குழந்தைகள் தங்கள் சொந்த செயல்பாட்டின் மூலம் தங்கள் உலகத்தைப் பற்றிய அனைத்து அறிவையும் கண்டுபிடிப்பதாகவோ அல்லது உருவாக்குவதாகவோ கருதினார்.
**காரணம் (R):**
ஜீன் பியாஜெட்டின் அறிவாற்றல் வளர்ச்சிக் கோட்பாடு, அறிவாற்றல் வளர்ச்சிக்கான ஒரு பூர்வீக அணுகு முறையாக விவரிக்கப்படுகிறது.
(A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை மற்றும் **(R)** ஆனது **(A)** விற்கான சரியான விளக்கமாகும்.
(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை ஆனால் **(R)** ஆனது **(A)** விற்கான சரியான விளக்கமில்லை.
(C) **(A)** சரியானது ஆனால் **(R)** தவறானது.
(D) **(A)** தவறானது ஆனால் **(R)** சரியானது.

5. **கூற்று I:**
பியாஜெட்டின் கூற்றுப்படி, செயல்பாட்டுக்கு முந்தைய சிந்தனையின் மிக அடிப்படையான குறைபாடு சுயநலம் ஆகும்.
**கூற்று II:**
தன் முனைப்பு சுயநலம் என்பது மற்றவர்களின் குறியீட்டு கண்ணோட்டங்களை ஒருவரின் சொந்தக் கண்ணோட்டத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் திறன் ஆகும்.
(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் சரியானவை
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் தவறானவை
(C) **கூற்று I** சரியானது ஆனால் **கூற்று II** தவறானது
(D) **கூற்று I** தவறானது ஆனால் **கூற்று II** சரியானது

6. **கூற்று I:**
சூழலியல் அமைப்புக் கோட்பாட்டின்படி, உள்ளார்ந்த நிலை என்பது குழந்தையின் உள்ளார்ந்த சூழலில் செயல்பாடுகள் மற்றும் தொடர்பு முறைகளைக் கொண்டுள்ளது.
**கூற்று II:**
இந்த நிலையில் குழந்தை வளர்ச்சியைப் புரிந்து கொள்ள, அனைத்து உறவுகளும் ஒருதலைப்பட்சமானவை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்று பிரான்பென்ப்ரென்னர் வலியுறுத்துகிறார்.
(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் சரியானவை
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் தவறானவை
(C) **கூற்று I** சரியானது ஆனால் **கூற்று II** தவறானது
(D) **கூற்று I** தவறானது ஆனால் **கூற்று II** சரியானது

7. சுற்றுச்சூழல் அமைப்புகள் கோட்பாட்டின் மூலம் முன்மொழியப்பட்ட நிலைகளுக்கு ஏற்ப தனிநபர் சூழல்களை ஒழுங்கு படுத்துக.
(a) வீடு, பள்ளி மற்றும் அருகாமை
(b) கலாச்சார விழுமங்கள், விதிகள் மற்றும் வளமூலங்கள்
(c) தனிநபர் மற்றும் அவனுடைய உடன் சூழல்
(d) மதநிறுவனங்கள், பெற்றோர் பணியிடம்
(A) (a), (c), (d), (b)
(B) (d), (c), (a), (b)
(C) (c), (a), (d), (b)
(D) (b), (c), (d), (a)

8. **கூற்று I:**
கீழ்நிலை மனத் தூண்டுதல்களுக்கும் மேனிலை மனதின் கோரிக்கைகளுக்கும் இடையில் ஈகோவின் மத்தியஸ்தப் பங்கை எரிக் எரிக்சன் நிராகரிக்கிறார்.
**கூற்று II:**
ஒவ்வொரு கட்டத்திலும் ஈகோ வளர்ச்சிக்கு நேர்மறையான பங்களிப்பை அளிக்கிறது. மனப்பான்மைகளையும் திறன்களையும் பெறுகிறது. இது தனிநபரை சமூகத்தின் சுறுசுறுப்பான பங்களிப்பு செய்யும் உறுப்பினராக ஆக்குகிறது என்பதை எரிக் எரிக்சன் ஏற்றுக் கொள்கிறார்.
(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் சரியானவை
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் தவறானவை
(C) **கூற்று I** சரியானது ஆனால் **கூற்று II** தவறானது
(D) **கூற்று I** தவறானது ஆனால் **கூற்று II** சரியானது

9. **பட்டியல்-I**-இல் கொடுக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளை **பட்டியல்-II**-இல் உள்ள அவற்றின் தொடர்புடைய சூழல்களுடன் பொருத்துக:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| (a) மீசோ அமைப்பு | (i) குழந்தையின் உடனடிச் சூழல் |
| (b) எக்ஸோ அமைப்பு | (ii) கலாச்சார மதிப்புகள் மற்றும் பழக்க வழக்கங்கள் |
| (c) நுண் அமைப்பு | (iii) நுண் அமைப்புகளுக்கு இடையேயான இணைப்புகள் |
| (d) பேரளவு அமைப்பு | (iv) முறையான நிறுவன அமைப்புகள் |

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)
(D) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

10. கீழே இரண்டு **கூற்றுகள்** கொடுக்கப் பட்டுள்ளன. ஒன்று **கூற்று (அனுமானம்) (A)** என்றும் மற்றொன்று **காரணம் (R)** என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

**அனுமானம் (A):**
கவனம் என்பது ஒரு செயல். செயல்முறை அல்லது செயல்பாடாக நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது.

**காரணம் (R):**
கவனம் என்பது விரும்பிய முடிவுகளை அடைவதற்காக ஒரு தலைப்பு, பொருள், நிகழ்வின் மீதான கவனகுவிப்பு செய்தல், கவனிக்கும் செயல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மேலே உள்ள **கூற்றுகளின்** அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களி லிருந்து மிகவும் **பொருத்தமான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் உண்மை மற்றும் **(R)** என்பது **(A)** ன் சரியான விளக்கம்.
(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் உண்மை ஆனால் **(R)** என்பது **(A)** ன் சரியான விளக்கம் அல்ல.
(C) **(A)** என்பது சரி ஆனால் **(R)** என்பது தவறு.
(D) **(A)** என்பது தவறு ஆனால் **(R)** என்பது சரி.

11. கீழே கொடுக்கப்பட்டவற்றில் எவை கவனத்தின் உள் தீர்மானங்கள் ஆகும்?
(a) உள்ளுணர்வு
(b) புதுமை
(c) நோக்கங்கள்
(d) உடல் நிலை

(A) (b), (c) மற்றும் (d) மட்டும்
(B) (a), (b) மற்றும் (c) மட்டும்
(C) (a), (b) மற்றும் (d) மட்டும்
(D) (a), (c) மற்றும் (d) மட்டும்

12. இரண்டு **கூற்றுகள்** கீழே கொடுக்கப்பட் டுள்ளன:

**கூற்று I:**
பழக்கம் படுத்துதல் என்பது மூளை, மாறிவரும் தகவல்களைக் கையாளும் விதம் ஆகும்.

**கூற்று II:**
மாறாத தூண்டுதலுக்கு உணர்திறன் ஏற்பி செல்கள் குறைவான எதிர்வினையாற்று கின்றன.

மேலே உள்ள **கூற்றுகளின்** அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களி லிருந்து மிகவும் **பொருத்தமான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** ம் சரி
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** ம் தவறு
(C) **கூற்று I** சரி ஆனால் **கூற்று II** சரியானதல்ல
(D) **கூற்று I** சரியானதல்ல ஆனால் **கூற்று II** சரி

13. கீழே இரண்டு **கூற்றுகள்** கொடுக்கப் பட்டுள்ளன. ஒன்று **கூற்று (அனுமானம்) (A)** என்றும் மற்றொன்று **காரணம் (R)** என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

**அனுமானம் (A):**
ஒரு நபர் உண்மையல்லாத ஒன்றை பார்க்கின்றார் அல்லது கேட்கிறார்.

**காரணம் (R):**
ஒரு மாயை என்பது யதார்த்தத்துடன் ஒத்துப் போகாத ஒரு புலன்காட்சி ஆகும்.

மேலே உள்ள **கூற்றுகளின்** அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களி லிருந்து மிகவும் **பொருத்தமான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மற்றும் **(R)**, **(A)** ன் சரியான விளக்கம் ஆகும்.
(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)**, **(A)** ன் சரியான விளக்கம் அல்ல.
(C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.
(D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

14. **அனுமானம் (A):**
பல்வேறு துறைகளில் உள்ள அறிவு சார்ந்த கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கம் ஆகியன முயற்சி–பிறழ்ச்சி செயலின் விளைவுகளே ஆகும்.

**காரணம் (R):**
விலங்குகள் முயற்சி–பிறழ்ச்சி வழிமுறை யையே பின்பற்றுகின்றன.

(A) **(A)**, **(R)** ஆகிய இரண்டும் சரியானவை ஆகும் மற்றும் **(R)** என்பது **(A)** க்கான சரியான விளக்கம் ஆகும்.
(B) **(A)**, **(R)** ஆகிய இரண்டும் சரியான வையே ஆனால் **(R)** என்பது **(A)** க்கான சரியான விளக்கம் அல்ல.
(C) **(A)** என்பது சரி ஆனால் **(R)** என்பது தவறு.
(D) **(A)** என்பது தவறு ஆனால் **(R)** என்பது சரி.

15. கீழ்காண்பவற்றில் எவையெவை தார்ண்டைக் கூறும் விதிகளுள் அடங்கும்?
(a) மனப்பான்மை விதி
(b) ஒத்த தன்மை விதி
(c) உருவக விதி
(d) இணைப்பு மாறும் விதி

(A) (b), (c) மற்றும் (d) மட்டும்
(B) (a), (b) மற்றும் (c) மட்டும்
(C) (a), (b) மற்றும் (d) மட்டும்
(D) (a), (c) மற்றும் (d) மட்டும்

16. **கூற்று I :**
திரவ நுண்ணறிவு என்பது நாம் வாழ்நாள் அனுபவத்தில் சேமித்து வைக்கும் திரட்டப்பட்ட அறிவைக் குறிக்கிறது.

**கூற்று II :**
திரவ நுண்ணறிவு வயதுக்கு ஏற்ப மெதுவாகக் குறைவது போல் தெரிகிறது.

(A) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் சரியானவை
(B) **கூற்று I** மற்றும் **கூற்று II** இரண்டும் தவறானவை
(C) **கூற்று I** சரியானது ஆனால் **கூற்று II** தவறானது
(D) **கூற்று I** தவறானது ஆனால் **கூற்று II** சரியானது

17. **பட்டியல்-I** றினை **பட்டியல்-II** யுடன் பொருத்துக:

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | இருகாரணிக் கோட்பாடு | (i) | **L.L.** தர்ஸ்டோன் |
| (b) | குழுக்காரணிக் கோட்பாடு | (ii) | **E.L.** தார்ண்டைக் |
| (c) | பல்காரணிக் கோட்பாடு | (iii) | ஸ்டெர்ன்பெர்க் |
| (d) | முக்காரணிக் கோட்பாடு | (iv) | ஸ்பிபெர்மென் |

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(D) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)

18. **பட்டியல்-I** றினை **பட்டியல்-II** யுடன் பொருத்துக:

| **பட்டியல்-I** | | **பட்டியல்-II** | |
|---|---|---|---|
| (a) | படைப்பாற்றலை வளர்ப்பது | (i) | நான்கு நிலைகள் |
| (b) | வாலாவின் படைப்பாற்றல் செயல்முறை | (ii) | முதன்மை மற்றும் இரண்டாம் நிலை செயல்முறை |
| (c) | அரியெட்டிஸ் படைப்பாற்றல் கோட்பாடு | (iii) | சாகச இயல்பு கொண்ட |
| (d) | படைப்பாற்றலின் பண்புகள் | (iv) | அறிவுப்பகர்தல் |

(A) (a)-(i), (b)-(iii), (c)-(ii), (d)-(iv)
(B) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

19. **அனுமானம் (A):**
தம்மைப் புரிந்து கொள்வதில் ஒரு முக்கிய பகுதி, நமது ஆளுமைப் பண்புகள் என்ன என்பதைப் பற்றிய உணர்வை வளர்த்துக் கொள்வதாகும்.

**காரணம் (R):**
ஆளுமை என்பது ஒரு நபர் பல்வேறு சூழ்நிலைகளில் வெளிக்காட்டும் நடத்தை முறைகள் அல்லது அந்த நடத்தை முறைகளுக்கு வழிவகுக்கும் நபரின் உளவியல் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை மற்றும் **(R)** ஆனது **(A)** விற்கான சரியான விளக்கம் ஆகும்.
(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை மற்றும் **(R)** ஆனது **(A)** விற்கான சரியான விளக்கம் அல்ல.
(C) **(A)** சரியானது ஆனால் **(R)** தவறானது.
(D) **(A)** தவறானது ஆனால் **(R)** சரியானது.

20. **பட்டியல்-I** றினை **பட்டியல்-II** யுடன் பொருத்துக:

| **பட்டியல்-I** | | **பட்டியல்-II** | |
|---|---|---|---|
| (a) | இரத்தம் | (i) | மனவெழுச்சி குறைந்த |
| (b) | மஞ்சள்பித்தம் | (ii) | மனச்சோர்வு |
| (c) | கபம் | (iii) | நேர்மறை நம்பிக்கை மிகுந்த |
| (d) | கரும் பித்தம் | (iv) | முன்கோபம் கொண்ட |

(A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(B) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(C) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

21. ஆளுமை வளர்ச்சியில் அமைந்த பின் வரும் உளப்-பாலியல் நிலைகளை ஒழுங்கு படுத்துக.
(a) உள்ளார்ந்த வளர்ச்சி நிலை
(b) பாலிக் நிலை
(c) பிறப்புறுப்பு நிலை
(d) வாய்சார்பு நிலை
(e) குத நிலை

(A) (b), (a), (c), (e), (d)
(B) (c), (e), (a), (b), (d)
(C) (d), (e), (b), (a), (c)
(D) (d), (b), (e), (c), (a)

22. கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று **அனுமானம் (A)** என்றும் மற்றொன்று **காரணம் (R)** என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

**அனுமானம் (A):**
உள்ளடக்குதல் என்பது ஒரு அடிப்படை மனித உரிமை, அது ஒரு சிறப்புரிமை அல்ல.

**காரணம் (R):**
பன்முகத் தன்மை கொண்ட கற்றல் சூழலை அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் நிவர்த்தி செய்வதே உள்ளடக்குதலின் அடிப்படைத் தத்துவமாகும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான விடையை தெரிந்தெடுக்கவும்.

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டுமே சரி, **(R)**, **(A)** -யின் சரியான விளக்கமாகும்.
(B) **(A)** மற்றும் **(R)** இரண்டுமே சரி ஆனால் **(R)**, **(A)** -யின் சரியான விளக்கம் இல்லை.
(C) **(A)** சரி ஆனால் **(R)** சரியல்ல.
(D) **(A)** சரியல்ல ஆனால் **(R)** சரி.

23. மணவிலக்கம் பெற்ற பெற்றோர்கள் பிறிதொரு துணையுடன் உடன் உறைவு முறையிலோ மறுமண முறையிலோ வாழத் தலைப்படும் போது, அவர்களின் குழந்தைகள் பின்வரும் எந்த குடும்பப் பாணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்?

(a) கலப்புக் குடும்பம்
(b) நவீனக் குடும்பம்
(c) விரிவுக் குடும்பம்
(d) மறுகட்டமைப்புக் குடும்பம்

(A) (a), (b) மற்றும் (c) மட்டும்
(B) (a), (c) மற்றும் (d) மட்டும்
(C) (a) மற்றும் (d) மட்டும்
(D) (b) மற்றும் (c) மட்டும்

24. **பட்டியல்-I**-ஐ **பட்டியல்-II**-டு பொருத்துக:

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | குறிப்பிட்ட கற்றல் குறைபாடு | (i) | தொடர்புகள் மற்றும் சமூக நடத்தைகளில் வரம்புகள் |
| (b) | ஆட்டிசம் | (ii) | உடல் அசைவையும் தசை இயக்கங்களையும் பாதிக்கும் நாள் பட்ட நிலை |
| (c) | பெரு மூளை வாதம் | (iii) | ஒருவருடைய செயல், நடத்தை மற்றும் பணிகளைச் செய்தலானது அவரது வளர்ச் சிக்கு பொருத்தமாக ஒழுங்குபடுத்த முடியாத கோளாறு |
| (d) | கவனக் குறைவு மிகை இயக்கக் கோளாறு | (iv) | தனிநபருக்கு உள்ளார்ந்த கற்றல் மற்றும் அறிவு சார்ந்த கோளாறு |

(A) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

25. **பட்டியல்-I**-ஐ **பட்டியல்-II**-டன் சரியாக பொருத்துக:

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | கற்பவர் சார்ந்த காரணி | (i) | கற்றல் அனுவபம் |
| (b) | ஆசிரியர் சார்ந்த காரணி | (ii) | கற்றல் சூழல் மற்றும் வளம் |
| (c) | பாடம் சார்ந்த காரணி | (iii) | அடைவு ஊக்கம் |
| (d) | செயல்பாடு சார்ந்த காரணி | (iv) | ஆளுமைக் கூறுகள் மற்றும் நடத்தை |

(A) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

26. கொடுக்கப்பட்டுள்ளவற்றில் பள்ளி சமுதாய உறவை மேம்படுத்துவது எது ?
(A) ஆசிரியர்கள் கூட்டங்கள்
(B) பள்ளி மேலாண்மை குழுக்கள்
(C) மாணவர் நல குழுக்கள்
(D) பெற்றோர் ஆசிரியர் அமைப்புகள்

27. **உறுதிப்படுத்துதல் (A):**
கற்பித்தல் இயந்திரம் முக்கியமான ஒரு தொழில்நுட்ப கருவி. அதன் மூலம் எளிமையாக தொடர்ந்து வலுவூட்டுவதால் விரும்பத்தக்க நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தலாம்.
**காரணம் (R):**
தொடர்ச்சியான வலுவூட்டுதல் மூலம் நடத்தையை வடிவமைக்க முடியும். அதை மனித ஆசிரியர் மூலம் ஏற்படுத்தலாம்.
(A) **(A), (R)** ஆகிய இரண்டுமே சரியானவை. அதோடு **(R)** என்பது **(A)**-க்கு பொருத்தமான விளக்கம் ஆகும்.
(B) **(A), (R)** ஆகிய இரண்டுமே சரியானவை. அதோடு **(R)** என்பது **(A)**-க்கு பொருத்தமான விளக்கம் இல்லை.
(C) **(A)** என்பது சரி, ஆனால் **(R)** என்பது தவறு.
(D) **(A)** என்பது தவறு, ஆனால் **(R)** என்பது சரி.

28. "ஒரு ஆசிரியர் தொடர்ந்து அவராகவே கற்காவிட்டால், அவரால் உண்மையாக கற்பிக்க முடியாது. ஒரு விளக்கு தொடர்ந்து ஒளிராவிட்டால் வேறு ஒரு விளக்கை ஒளிர வைக்க முடியாது" என்று கூறியவர் யார் ?
(A) சுவாமி விவேகானந்தர்
(B) மகாத்மா காந்திஜி
(C) இரவீந்திரநாத் தாகூர்
(D) Dr. இராதா கிருஷ்ணன்

29. பின்வரும் கொள்கைகள் மற்றும் சட்டங்களை காலவரிசைப்படி ஒழுங்குபடுத்துக.
(a) குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்
(b) தேசியக் கல்விக் கொள்கை
(c) தேசிய அறிவு ஆணையம்
(d) தேசிய ஆசிரியர்கள் ஆணையம்
(A) (b), (d), (c), (a)
(B) (d), (c), (a), (b)
(C) (d), (b), (c), (a)
(D) (b), (a), (c), (d)

30. கல்வி பயன்பாட்டிற்கான தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான கொள்கைகளில் பின்வருவன எவை ?
(a) பொருத்தத்தன்மை
(b) நம்பகத்தன்மை
(c) தகவல்
(d) ஆர்வம்
(A) (a), (b) மற்றும் (d) மட்டும்
(B) (a), (c) மற்றும் (d) மட்டும்
(C) (b), (c) மற்றும் (d) மட்டும்
(D) (a), (b) மற்றும் (c) மட்டும்

## தமிழ்

31. கடல் என்பது _____ சீர்.
(A) நேரசை
(B) மூவசை
(C) நிரையசை
(D) நாலசை

32. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவிற்கான மாத்திரை என்ன ?
(A) 1
(B) 2
(C) $\frac{1}{2}$
(D) 3

33. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ஈரறிவு | (i) | பறவை, விலங்கு |
| (b) | ஓரறிவு | (ii) | கரையான், எறும்பு |
| (c) | மூவறிவு | (iii) | சிப்பி, நத்தை |
| (d) | ஐந்தறிவு | (iv) | புல், மரம் |

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

34. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று:
(A) ஏவல் வினைமுற்று
(B) குறிப்பு வினைமுற்று
(C) தெரிநிலை வினைமுற்று
(D) வியங்கோள் வினைமுற்று

35. 'உயிர்மெய் நெடில்' எழுத்துகள் மொத்தம்:
(A) 126
(B) 132
(C) 90
(D) 12

36. எட்டுப் பொருளில் வரும் இடைச்சொல்:
(A) ஆ
(B) மட்டும்
(C) தான்
(D) ஓ

37. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வருவது:
(A) மூன்றாம் வேற்றுமை
(B) இரண்டாம் வேற்றுமை
(C) நான்காம் வேற்றுமை
(D) ஐந்தாம் வேற்றுமை

38. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! – என்னும் அடியில் 'கொடுத்தோர்' என்னும் சொல்லுக்கான இலக்கணக் குறிப்பினைத் தேர்க.
(A) தொழிற்பெயர்
(B) வினையாலணையும் பெயர்
(C) வியங்கோள் வினைமுற்று
(D) உரிச்சொல் தொடர்

39. 'நீள் + உழைப்பு' – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்:
(A) நீள்ளுழைப்பு
(B) நீளுஉழைப்பு
(C) நீண்டுழைப்பு
(D) நீளுழைப்பு

40. 'பிழைத்த வேல்' – இது எவ்வகைத் தொடர் என்பதைக் குறிப்பிடுக.
(A) பெயரெச்சத் தொடர்
(B) அடுக்குத் தொடர்
(C) உரிச்சொல் தொடர்
(D) வினையெச்சத் தொடர்

41. 'பகைவனென்றாலும்'–என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது _____.
(A) பகைவன் + என்று + ஆலும்
(B) பகைவன் + என்றாலும்
(C) பகை + அன் + என் + ஆலும்
(D) பகை + என்று + ஆலும்

42. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்:
(A) மெய்யெழுத்துகள் பதினெட்டு
(B) மெய்யெழுத்துகள் பதினேழு
(C) மெய்யெழுத்துகள் பதினாறு
(D) மெய்யெழுத்துகள் பதினான்கு

43. 'குவிமொட்டு' – இலக்கணக் குறிப்புத் தருக.
(A) பண்புத் தொகை
(B) வினைத் தொகை
(C) அன்மொழித் தொகை
(D) உவமைத் தொகை

44. வல்லினம் மிகும் இடங்களில் ஒன்று _____.
(A) உவமைத் தொகை
(B) வினைத் தொகை
(C) உம்மைத் தொகை
(D) பெயரெச்சம்

45. பொருத்துக:

| | |
|---|---|
| (a) புறா | (i) குழறும் |
| (b) கோழி | (ii) கொக்கரிக்கும் |
| (c) சேவல் | (iii) குனுகும் |
| (d) கூகை | (iv) கூவும் |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(B) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(C) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

46. பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பை எவ்வாறு அழைக்கலாம்?
(A) சாரியை
(B) விகாரம்
(C) எழுத்துப் பேறு
(D) சந்தி

47. இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை _____ என்பர்.
(A) பண்புத்தொகை
(B) வினைத்தொகை
(C) வேற்றுமைத்தொகை
(D) உம்மைத்தொகை

48. கீழ்க்கண்டவற்றுள் காரணச் சிறப்புப் பெயர் எது?
(A) பறவை
(B) மண்
(C) மரம்
(D) மரங்கொத்தி

49. செற்றவர் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?
(A) வினைமுற்று
(B) வினையாலணையும் பெயர்
(C) தொழிற்பெயர்
(D) பெயர்ச்சொல்

50. உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணர வைப்பது _____ அணி ஆகும்.
(A) வேற்றுமை அணி
(B) பிறிதுமொழிதல் அணி
(C) எடுத்துக்காட்டு உவமை அணி
(D) இயல்புநவிற்சி அணி

51. கீழ்க்காணும் சொற்றொடரில் தனிச் சொற்றொடர் எது?
(A) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்
(B) அழைப்பு மணி ஒலித்ததால் கயல்விழி கதவைத் திறந்தார்
(C) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கிய தால் கூடியிருந்த மக்கள் அமைதியா யினர்
(D) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்

52. பொன்னகர் – இலக்கணக் குறிப்பு தருக.
(A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
(B) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
(C) பண்புத் தொகை
(D) உவமைத் தொகை

53. பொருத்துக:
(a) காக்கென்று (i) இடைக்குறை
(b) கணீர் (ii) வினைத் தொகை
(c) உய் முறை (iii) வேற்றுமைத் தொகை
(d) மெய் முறை (iv) தொகுத்தல் விகாரம்
(A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(B) (a)-(iii), (b)-(ii), (c)-(i), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(D) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

54. இது செய்வாயா ? என்று வினவிய போது 'நீயே செய்' என்று கூறுவது எவ்வகை விடை ?
(A) ஏவல் விடை
(B) மறை விடை
(C) இனமொழி விடை
(D) சுட்டு விடை

55. கீழ்காணும் தொடரில் **சரியான** மரபுத் தொடர் எது ?
(A) கோவிந்தன் சோறு சாப்பிட்டு பால் பருகினான்
(B) கோவிந்தன் சோறு உண்டு பால் குடித்தான்
(C) கோவிந்தன் சோறு தின்று பால் பருகினான்
(D) கோவிந்தன் சோறு உண்டு பால் பருகினான்

56. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.
–இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி:
(A) பிறிதுமொழிதல் அணி
(B) உவமையணி
(C) உருவக அணி
(D) வேற்றுமை அணி

57. ஈரெழுத்துச் சொற்களாக அமையும் குற்றியலுகரம் எது ?
(a) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
(b) இடைத் தொடர்க் குற்றியலுகரம்
(c) நெடில் தொடர்க் குற்றியலுகரம்
(d) வன்தொடர்க் குற்றியலுகரம்
(A) (a) மட்டும் சரி
(B) (c) மட்டும் சரி
(C) (a), (c) சரி
(D) (a), (b), (c), (d) சரி

58. "நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து"
– இப்பாடல் அடிகளில் இடம் பெற்றுள்ள சொற்கள்:
(A) இடைச்சொற்கள், வினைச்சொற்கள்
(B) பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள்
(C) பெயர்ச்சொற்கள், இடைச்சொற்கள்
(D) உரிச்சொற்கள், பெயர்ச்சொற்கள்

59. அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கின் றேன். – இத்தொடரில் வரும் ஆகு பெயரினைத் தேர்ந்தெடுக்க.
(A) பொருளாகு பெயர்
(B) எண்ணலளவை ஆகுபெயர்
(C) தொழிலாகு பெயர்
(D) கருத்தாவாகு பெயர்

60. மூவர் என்னும் சொல்லின் **சரியான** பகுபத அமைப்பு முறை:
(A) மூ + வ் + அர்
(B) மூவ் + அர்
(C) மூன்று + வ் + அர்
(D) மூன்று + ஆவ் + அர்

## English

61. Ooty was the summer capital of the _____ during the British rule.
(A) British
(B) Todas
(C) Tourists
(D) Madras Presidency

62. Match the words in column **'A'** with their meanings in column **'B'**.

| | A | | B |
|---|---|---|---|
| 1. | Physician | I. | bring back |
| 2. | Restore | II. | surprise attack |
| 3. | Repent | III. | Medical practitioner |
| 4. | Ambush | IV. | regret |

(A) 1-III, 2-I, 3-IV, 4-II
(B) 1-II, 2-III, 3-I, 4-IV
(C) 1-IV, 2-III, 3-II, 4-I
(D) 1-III, 2-IV, 3-II, 4-I

63. "Remember, no men are foreign and no countries strange".
"Remember, no men are strange, no countries foreign".
What is the Literary Device employed here?
(A) Repetition
(B) Transferred Epithet
(C) Anaphora
(D) Simile

64. Match the professions with their relevant job descriptions.

| | A | | B |
|---|---|---|---|
| a. | Pathologist | i. | Studies language and their structure |
| b. | Ornithologist | ii. | Studies the matter that constitutes the earth |
| c. | Geologist | iii. | Studies diseases |
| d. | Linguist | iv. | Studies birds |

(A) a-iv, b-ii, c-i, d-iii
(B) a-iii, b-iv, c-ii, d-i
(C) a-ii, b-iv, c-iii, d-i
(D) a-i, b-ii, c-iii, d-iv

65. In Public Speaking skills, the information should not be _____.
(A) Purposeful
(B) Exciting
(C) Controversial
(D) Commercial

66. A Review helps the reader to _____.
(A) Learn Grammar
(B) Decide whether to read or watch something
(C) Write
(D) Memorize

67. What is the expansion of EMI ?
(A) Equated Monthly Investment
(B) Easy Monthly Instalment
(C) Equated Monthly Instalment Scheme
(D) Easy Monthly Investment

68. Which of the following is the correct order of a good speech ?
(A) Thanking the audience, summarizing the views and elaborating the main points
(B) Elaborating the main points, thanking the audience and summarize the views
(C) Introducing the topic, elaborating the main points and summarizing the views
(D) Summarizing the views, elaborating the main points and thanking the audience

69. Repetition of two or more consonant sounds is called as _____.
(A) Assonance
(B) Connotation
(C) Alliteration
(D) Personification

70. Given below are two statements on Finite verbs.
**Statement I :**
Finite verbs are used in the present tense and past tense.
**Statement II :**
Finite verbs are usually gerunds, infinitives or participle.
Choose the correct answer from the options given below :
(A) Both **Statement I** and **Statement II** are true
(B) Both **Statement I** and **Statement II** are false
(C) **Statement I** is true but **Statement II** is false
(D) **Statement I** is false but **Statement II** is true

71. "Animal Farm" is :
(A) A Novel
(B) A Comedy
(C) A tragic-comedy
(D) A Allegorical Novella

72. A Cinquain poem should have _____ lines and the finished poem should have only _____ words.
(A) 11, 5
(B) 12, 6
(C) 5, 11
(D) 6, 12

73. In a certain code language, if pen means Eraser, Eraser means Book, Book means Scale, Scale means Sharpener, Sharpener means Duster and Duster means Table, then what is the name of the object that is used to clean the black board in that language ?
(A) Duster
(B) Sharpener
(C) Table
(D) Scale

74. An _____ is a word that describes a noun.
(A) Pronoun
(B) Adverb
(C) Adjective
(D) Adjunct

75. Given below are two statements regarding Phrase and Clause.
**Statement I :**
Phrase - A phrase is a group of words with a finite verb in it.
**Statement II :**
Clause - A clause is a group of words with an infinite verb in it.

Choose the correct answer from the options given below.

(A) Both **Statement I** and **Statement II** are true

(B) Both **Statement I** and **Statement II** are false

(C) **Statement I** is true but **Statement II** is false

(D) **Statement I** is false but **Statement II** is true

76. Co-ordinate conjunctions are used to connect the Independent clauses in _____.

(A) Simple Sentences

(B) Imperative Sentences

(C) Complex Sentences

(D) Compound Sentences

77. Choose the correct tense form for the given sentence.
Saran _____ a poem for two hours when his friends arrived.

(A) have been writing

(B) has been writing

(C) had been writing

(D) will have been writing

78. What are the three main types of Dependent Clauses ?

(A) Adjective, Adverb and Noun

(B) Adjective, Adverb and Assertive

(C) Adverb, Noun and Adjunct

(D) Adjective, Noun and Affirmative

79. Choose the suitable comparative degree of 'bad'.

(A) bader

(B) worser

(C) worse

(D) more bad

80. Choose the correct expansion for PDF.

(A) Provident Data Fund

(B) Portable Document Format

(C) Profit and Dividend Fund

(D) Personal Document Format

81. What is an acronym ?
Choose the most appropriate option given below.

(A) It is the antonym of micro.

(B) An acronym is an abbreviation form of a phrase and can be read as a word.

(C) An acronym is a shortened form of a word or phrase.

(D) An acronym is a pair of words with same spelling but different meaning and pronunciation.

82. What does "The world is a stage" mean ?

(A) Simile

(B) Metaphor

(C) Epithet

(D) Hyperbole

83. An example of contraction is _____.

(A) you've

(B) I am

(C) cannot

(D) you 'are

84. "The kittens fur is like a velvet coat" is an example of :
(A) Alliteration
(B) Imagery
(C) Personification
(D) Metaphor

85. _____ is used to emphasize a feeling or idea.
Choose the most appropriate answer from the options given below.
(A) Irony
(B) Repetition
(C) Imagery
(D) Personification

86. "Thro scudding drifts the rainy Hyades Vext the dim sea"... Identify the figure of speech employed here.
(A) Metaphor
(B) Simile
(C) Personification
(D) Hyperbole

87. The title of the poem 'Sea Fever' means _____ .
(A) flu fever
(B) the poet's deep wish to be at sea
(C) the poet's fear of the sea
(D) a tall ship

88. Re-arrange the jumbled sentences.
1. Gulliver promptly fell asleep because his drink had a sleeping draught.
2. Gulliver dragged himself along the shore.
3. Gulliver was lodged in an old and disused temple.
4. Gulliver was really hungry.
(A) 4, 3, 1, 2
(B) 3, 2, 4, 1
(C) 2, 3, 1, 4
(D) 2, 4, 1, 3

89. Choose the word that has the same relationship as the pair on the left.
mango : sweet : : lime : ?
(A) fruit
(B) sour
(C) plant
(D) juice

90. Which poem was recited by Mr. Sanyal at the tea shop ?
(A) Geetanjali
(B) Panraksha
(C) National Anthem
(D) Vande Mataram

## கணக்கு

91. பட்டை வரைபடத்தில் உள்ள பட்டைகளின் இடைவெளியானது:
(A) சமமாக இருக்காது
(B) வெவ்வேறாக இருக்கும்
(C) சமமாக இருக்கும்
(D) இவை அனைத்தும்

92. 1, 2, 3, . . . n என்பதன் சராசரி $\frac{6n}{11}$ எனில் 'n'-ன் மதிப்பு:
(A) 10
(B) 12
(C) 11
(D) 13

93. 20 -க்கும் 40-க்கும் இடையிலுள்ள ஒற்றை எண்களின் முகடு காண்க.
(A) 29
(B) 39
(C) 31
(D) முகடு இல்லை

94. முக்கோணம் மற்றும் சதுரம் ஆகிய பக்கங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையேயுள்ள விகிதம்:
(A) 4 : 3
(B) 3 : 4
(C) 3 : 5
(D) 3 : 2

95. பரப்பளவு 140 ச.செ.மீ உம் இணைப்பக்க அளவுகளின் கூடுதல் 10 செ.மீ உம் கொண்ட சரிவகத்தின் உயரம்:
(A) 7 செ.மீ
(B) 40 செ.மீ
(C) 14 செ.மீ
(D) 28 செ.மீ

96. $y = px$, இங்கு $p \in z$ என்ற நேர்கோடானது _____ வழியே செல்லும்.
(A) (1, –1)
(B) (1, 0)
(C) (0, 1)
(D) (0, 0)

97. ஒரு எண்ணின் காரணிகள் 1, 2, 3, 5, 6, 10, 15 மற்றும் 30 ஆகும். அந்த எண் என்ன ?
(A) 30
(B) 10
(C) 15
(D) 25

98. $p(x)$ மற்றும் $q(x)$ என்பன படி 3 உடைய இரு கோவைகள் எனில் $p(x) + q(x)$-ன் படி:
(A) 6
(B) 0
(C) 3
(D) வரையறுக்கப்படவில்லை

99. ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களின் மையக்குத்து கோடுகளும் சந்திக்கும் புள்ளி, அதன் _____ ஆகும்.
(A) சுற்றுவட்ட மையம்
(B) செங்கோட்டு மையம்
(C) கோண இரு சமவெட்டி
(D) மையக்கோட்டு சந்தி

100. $\frac{3}{8}$ அல்லது $\frac{3}{7}$-ல் எது பெரியது ?
(A) $\frac{3}{7}$
(B) $\frac{3}{8}$
(C) $\frac{4}{7}$
(D) $\frac{3}{9}$

101. மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய ஈரிலக்கப் பகா எண்களை எழுதுக.
(A) 2, 99
(B) 11, 99
(C) 11, 97
(D) 13, 99

102. $\frac{99}{1000}$ என்ற எண்ணின் தசம வடிவம்:
(A) 9.9
(B) 0.099
(C) 0.0999
(D) 99

**103.** இவற்றுள் எந்த விகிதமுறு எண்ணிற்கு கூட்டல் நேர்மாறு உள்ளது ?

(A) 7

(B) $\frac{-5}{7}$

(C) 0

(D) இவை அனைத்தும்

**104.** ஒரு வகுப்பறையில் உள்ள கரும்பலகையின் நீளம் மற்றும் அகலம் முறையே $5xy^2$ மற்றும் $8x^2y^3$ எனில் கரும்பலகையின் பரப்பளவு:

(A) $40x^2y^2$

(B) $40x^5y^3$

(C) $40xy$

(D) $40x^3y^5$

**105.** இரண்டு எண்களின் சராசரி 15.5. அவற்றுள் ஒரு எண் 13.5 எனில், மற்றொரு எண் _____.

(A) 17.5

(B) 13.5

(C) 15.5

(D) 2.5

**106.** ஒரு சோடி பகா எண்களின் வேறுபாடு 2 எனில் அது _____ எனப்படும்.

(A) அடுத்தடுத்த இரு பகா எண்கள்


(B) ஒற்றை பகா எண்கள்

(C) இரட்டை பகா எண்கள்


(D) பகு எண்கள்

**107.** `a'-ன் 16 மடங்கிலிருந்து 10 குறைவு இதனை மரவுரு வரைபடமாக மாற்றுக.


(A)





(B)





(C)




(D)




**108.** மரவுரு வரைபடத்தை எண் கோவையாக மாற்றுக.




(A) (10 ÷ 6) + (16 ÷ 2)

(B) (10 × 16) + (6 ÷ 2)

(C) (6 ÷ 10) + (2 ÷ 16)

(D) (6 × 10) + (2 ÷ 16)

**109.** கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் $x$ மற்றும் $y$ -இன் மதிப்புகளுக்கு இடையேயான **சரியான** தொடர்பை தேர்ந்தெடுக்க.

| $x$ | –2 | –1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|
| $y$ | 3 | 4 | 5 | 6 | 7 |

(A) $y = x + 4$

(B) $y = x + 5$

(C) $y = x + 6$

(D) $y = x + 7$

110. ஒரு வட்டத்தின் பரப்பளவிற்கும் அதன் அரைவட்டத்தின் பரப்பளவிற்கும் இடையேயுள்ள விகிதம்:
(A) 2 : 1
(B) 1 : 2
(C) 4 : 1
(D) 1 : 4

111. ABC என்பது ஒரு முக்கோணம் என்க. AM என்பது அதன் நடுக்கோடுகளில் ஒன்றாகும். BM = 9.6 செ.மீ எனில் பக்கம் BC-ன் நீளம் என்ன ?
(A) 7 செ.மீ
(B) 19.2 செ.மீ
(C) 6 செ.மீ
(D) 18.36 செ.மீ

112. சாய்சதுர வடிவில் உள்ள ஒரு பூங்காவின் சுற்றளவு 400 மீ மற்றும் ஒரு மூலை விட்டத்தின் அளவு 160 மீ எனில் அதன் பரப்பு:
(A) 9600 மீ$^2$
(B) 9800 மீ$^2$
(C) 9460 மீ$^2$
(D) 9260 மீ$^2$

113. பின்வரும் இணைகளில், எவை சார்பகா எண்கள் ஆகும் ?
(A) 51, 17
(B) 19, 23
(C) 81, 99
(D) 51, 63

114. சுருக்குக:

$$\frac{(3^2)^{-3}\times(2^3)^{-2}}{(2^2)^{-4}\times(3^{-5})\times(4^{-3})}$$

(A) $84\frac{1}{3}$
(B) 85
(C) $85\frac{1}{3}$
(D) $83\frac{1}{5}$

115. இரு விகித முறு எண்களின் கூடுதல் $\frac{8}{9}$ ஆகும். ஒரு எண் $-\frac{6}{11}$ எனில், மற்றொரு எண்:
(A) $\frac{34}{99}$
(B) $\frac{-142}{99}$
(C) $\frac{142}{99}$
(D) $\frac{-34}{99}$

116. மிகப்பெரிய நான்கு இலக்க முழுவர்க்க எண்:
(A) 9180
(B) 9801
(C) 9901
(D) 9081

117. கீழ்க்காண்பனவற்றுள் எது செங்கோண முக்கோணத்தை **அமைக்காது** ?
(A) 3 செ.மீ, 4 செ.மீ, 5 செ.மீ
(B) 6 செ.மீ, 8 செ.மீ, 10 செ.மீ
(C) 2 செ.மீ, 3 செ.மீ, 4 செ.மீ
(D) 12 செ.மீ, 16 செ.மீ, 20 செ.மீ

**118.** பின்வருவனவற்றுள் எது **தவறு ?**

(i) $a^2+\frac{1}{a^2}=\left(a+\frac{1}{a}\right)^2-2$

(ii) $a^2+\frac{1}{a^2}=\left(a-\frac{1}{a}\right)^2+2$

(iii) $\left(a+\frac{1}{a}\right)^2-\left(a-\frac{1}{a}\right)^2=4$

(iv) $\left(a+\frac{1}{a}\right)^2+\left(a-\frac{1}{a}\right)^2=2\left(a^2+\frac{1}{a^2}\right)^2$

(A) (i)
(B) (ii)
(C) (iii)
(D) (iv)

**119.** தீர்க்க: $5-7x \geq 40$
(A) $x > -5$
(B) $x < -5$
(C) $x \geq -5$
(D) $x \leq -5$

**120.** பின்வருவனவற்றில் பெரிய எண்ணைத் தேர்ந்தெடுக்க:

$\sqrt[3]{4}, \sqrt[4]{5}, \sqrt[4]{6}, \sqrt[6]{7}$

(A) $\sqrt[4]{5}$
(B) $\sqrt[4]{6}$
(C) $\sqrt[3]{4}$
(D) $\sqrt[6]{7}$

## அறிவியல்

**121.** திடநிலையில் உள்ள பனிக்கட்டி தன்வெப்ப ஏற்பு திறன்:
(A) $4200\ Jkg^{-1}K^{-1}$
(B) $2100\ Jkg^{-1}K^{-1}$
(C) $460\ Jkg^{-1}K^{-1}$
(D) $1000\ Jkg^{-1}K^{-1}$

**122.** கீழ்க்கண்ட பொருட்களில் எதற்கு பரும வெப்ப விரிவு குணகத்தின் மதிப்பு அதிகம்:
(A) அலுமினியம்
(B) நீர்
(C) பாதரசம்
(D) பித்தளை

**123.** துணைக்கோளின் ஆற்றல் மதிப்பு:
(A) சுழி மதிப்பு
(B) நேர்க்குறி மதிப்பு
(C) எதிர்க்குறி மதிப்பு
(D) ஈரில்லா மதிப்பு

**124.** 40°C வெப்பநிலை மதிப்பினை பாரன்ஹீட் மதிப்பிற்கு மாற்றுக.
(A) 100°F
(B) 102°F
(C) 104°F
(D) 101°F

**125.** மேகங்களிலிருந்து தரைக்கோ அல்லது தரையில் இருந்து மேகத்துக்கோ மின் துகள்கள் பாய்ந்து மிக அதிக அளவு மின்னழுத்த வேறுபாடு உருவாகும் நிகழ்ச்சி:
(A) மழையின் போது
(B) நகரும் போது
(C) மின்னலின் போது
(D) மின்னேற்றத்தின் போது

126. ராக்கெட்டில் திரவ எரிபொருளாக கீழ்க்கண்டவற்றுள் எது பயன்படாது ?
(A) திரவ ஹைட்ரஜன்
(B) மெத்தில் ஆல்கஹால்
(C) ஹைட்ரஜின்
(D) எத்தில் ஆல்கஹால்

127. அதிர்வெண் 50 Hz எனில், அலைவு காலம் என்ன ?
(A) 2 s
(B) 20 s
(C) 0.2 s
(D) 0.02 s

128. பாரீஸ் சாந்துவின் வேதிவாய்பாடு:
(A) $CaSO_4$
(B) $CaSO_4 \cdot \frac{1}{2} H_2O$
(C) $CaSO_4 \cdot 2H_2O$
(D) $MgSO_4 \cdot \frac{1}{2} H_2O$

129. போபால் விஷ வாயுத் துயரத்திற்குக் காரணமானது:
(A) மெத்தில் ஐசோ சயனேட்
(B) மெத்தில் ஐசோ சயனைடு
(C) மெத்தில் சயனைடு
(D) எத்தில் ஐசோ சயனைடு

130. இரசக்கலவை என்பது ஒரு உலோகமும் _____ம் கலந்த கலவையாகும்.
(A) சில்வர்
(B) மெர்க்குரி
(C) காப்பர்
(D) துத்தநாகம்

131. $_{19}K^{39}$ல் உள்ள புரோட்டான், நியூட்ரான் மற்றும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை:
(A) 19, 20, 19
(B) 20, 19, 20
(C) 19, 19, 20
(D) 20, 18, 19

132. BHC என்பது கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று ?
(A) நுண்ணுயிர்க்கொல்லி
(B) பூச்சிக்கொல்லி
(C) பூஞ்சைக்கொல்லி
(D) களைக்கொல்லி

133. கிரேக்க மொழியில் ஆக்ஸிஜன் என்பதன் பொருள்:
(A) கார உருவாக்கி
(B) அமில உருவாக்கி
(C) நீர் உருவாக்கி
(D) உப்பு உருவாக்கி

134. பொருத்துக:

| தனிமம் | | இணைதிறன் | |
|---|---|---|---|
| (a) | சோடியம் | (i) | 3 |
| (b) | மெக்னீசியம் | (ii) | 4 |
| (c) | அலுமினியம் | (iii) | 1 |
| (d) | கார்பன் | (iv) | 2 |

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(B) (a)-(i), (b)-(iv), (c)-(iii), (d)-(ii)
(C) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

135. கீழ்க்கண்டவற்றில் எது தொல்லுயிர் ஆஞ்சியோஸ்பெர்ம களுக்கு எடுத்துக்காட்டு:
(A) நயடைட்டா
(B) குக்சோனியா
(C) மெடுல்லோசா
(D) ஃபார்குலா

136. ஒரு செல் துகள்களுக்கு அனிமல்கியூல்ஸ் என்று பெயரிட்டவர் யார் ?
(A) ஆண்டோன்ஃபான் லியூவன்ஹாக்
(B) இராபர்ட் பிரௌன்
(C) இராபர்ட் ஹுக்
(D) ரூடால்ப் விர்ச்சௌ

137. நீரியம் தாவரத்தில் எந்த வகை இலை அடுக்கமைவு காணப்படுகிறது ?
(A) மாற்றிலை அடுக்கமைவு
(B) எதிரிலை அடுக்கமைவு
(C) மூவிலை அடுக்கமைவு
(D) வட்ட இலை அடுக்கமைவு

138. செல் நுண்ணுறுப்புகளுடன் அதன் பணிகளை இணைக்க.

| | | | |
|---|---|---|---|
| (a) | மைட்டோ காண்டிரியா | (i) | சுரத்தல் |
| (b) | பசுங்கணிகம் | (ii) | தற்கொலைப்பை |
| (c) | கோல்கை உடலம் | (iii) | ஒளிச்சேர்க்கை |
| (d) | லைசோசோம் | (iv) | சுவாசித்தல் |

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(B) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
(D) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

139. **தவறான** இணையைத் தேர்ந்தெடுக்கவும்:
(A) நீட்டம் - டிரக்கீடுகள்
(B) சைகஸ் - பவழ வேர்கள்
(C) பிக்னோசைலிக் - பைனஸ்
(D) ஆம்பர் - பைனிட்டிஸ் சக்ஸினிஃபெரா

140. கருவுறுதலுக்கு பின் சூலின் எந்த பகுதி பெரிஸ்பெர்ம் ஆக மாற்றமடையும் ?
(A) சூல்துளை
(B) சூலக உள்ளுறை
(C) சூல்திசு
(D) எதிரடிச் செல்கள்

141. ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை வளர்க்கப்படும் பயிர்கள் _____.
(A) ரபி பயிர்கள்
(B) காரிப் பயிர்கள்
(C) சயாடு பயிர்கள்
(D) நார் பயிர்கள்

142. செல் கொள்கைக்கு தொடர்பு **அற்றது** எது ?
1. அனைத்து உயிரினங்களும் செல்களால் ஆனவை.
2. அனைத்து வளர்சிதை மாற்ற வினைகளும் செல்லுக்கு வெளியே நடைபெறுகிறது.
3. ஏற்கனவே உள்ள செல்களிலிருந்து புதிய செல்கள் தோன்றுகின்றன.
4. செல் மரபியல் தகவல்களை கொண்டிருக்காது.
(A) 1 மற்றும் 3
(B) 2 மற்றும் 4
(C) 2 மற்றும் 3
(D) 3 மற்றும் 4

143. எந்த இணை **சரியாகப்** பொருத்தப் பட்டுள்ளது ?
(A) தட்டைபுழுக்கள் - அஸ்காரிஸ்
(B) உருளைப் புழுக்கள் - யானைக்கால் புழு
(C) வளைதசை புழுக்கள் - சிலந்தி
(D) கணுக்காலிகள் - மண்புழு

144. மனித இரத்தத்தில் உள்ள லிம்போ சைட்டுகளை எளிய முறையில் வளர்ப்பது குறித்து முதன் முதலில் விளக்கியவர்கள் _____.
(A) மேரி லையன்
(B) ஜியோ மற்றும் லிவான்
(C) ஃபிஷர் மற்றும் ரேஸ்
(D) பெர்னஸ்டின்

145. மையோகுளோபின் கீழ்கண்டவற்றுள் எவற்றை சேமித்துவைக்க உதவுகிறது ?
(A) $Ca^{++}$
(B) $CO_2$
(C) $O_2$
(D) டுரோபியம்

146. மெலிந்த உடல் மடிப்புகளுடன் கூடிய தோல் இது _____ நோயின் அறிகுறி.
(A) மராஸ்மஸ்
(B) ரிக்கட்
(C) குள்ளத்தன்மை
(D) காலரா

147. தமனி குறித்த **சரியான** கூற்றுகளை தேர்ந்தெடு:
(i) வழங்கும் குழாய்கள்
(ii) உடலின் மேற்பகுதியில் அமைந் துள்ளது
(iii) குறைந்த அழுத்தத்துடன் கூடிய இரத்த ஓட்டம்
(iv) தமனியின் சுவர்கள் வலிமையான, தடித்த, மீளும் தன்மை உடையவை
(v) நுரையீரல் தமனியை தவிர மற்ற அனைத்து தமனிகளும் ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தத்தினை எடுத்து செல்கின்றன
(vi) உள்ளீடு வால்வுகள் உண்டு

**குறியீடுகள்:**
(A) (i), (ii), (iii), (iv) மற்றும் (v) சரியானவை
(B) (ii) மற்றும் (v) சரியானவை
(C) (i), (iv) மற்றும் (v) சரியானவை
(D) (i), (ii), (v) மற்றும் (vi) சரியானவை

148. புரோதுரோம்பின் எனப்படும் புரதம் இதன் மூலம் துரோம்பினாக மாறுகிறது:
(A) வைட்டமின்-D
(B) வைட்டமின்-E
(C) வைட்டமின்-K
(D) வைட்டமின்-C

149. கிட்டப்பார்வை இவ்வாறு அழைக்கப் படுகிறது:
(A) ஹைப்பர்மெட்ரோப்பியா
(B) மையோப்பியா
(C) அஸ்டிக்மாடிசம்
(D) பிரஸ்பையோபியா

150. சிறுகுடலில் குடல் அலை இயக்கம் மற்றும் சுரப்புகளை தடை செய்யும் நரம்பு மண்டலம்:
(A) புற நரம்பு மண்டலம்
(B) தானியங்கு நரம்பு மண்டலம்
(C) பரிவு நரம்பு மண்டலம்
(D) இணை பரிவு நரம்பு மண்டலம்

## TNTET_2026_PAPER-II_Key (Mathematics & Science)

| Q.No. | Key | Q.No. | Key | Q.No. | Key | Q.No. | Key | Q.No. | Key |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 31 | C | 61 | D | 91 | C | 121 | B |
| 2 | B | 32 | C | 62 | A | 92 | C | 122 | B |
| 3 | C | 33 | B | 63 | A | 93 | D | 123 | C |
| 4 | C | 34 | D | 64 | B | 94 | B | 124 | C |
| 5 | C | 35 | A | 65 | C | 95 | D | 125 | C |
| 6 | B | 36 | D | 66 | B | 96 | D | 126 | B |
| 7 | C | 37 | B | 67 | C | 97 | A | 127 | D |
| 8 | D | 38 | B | 68 | C | 98 | C | 128 | B |
| 9 | B | 39 | D | 69 | C | 99 | A | 129 | A |
| 10 | A | 40 | A | 70 | C | 100 | A | 130 | B |
| 11 | D | 41 | B | 71 | D | 101 | C | 131 | A |
| 12 | D | 42 | A | 72 | C | 102 | B | 132 | B |
| 13 | B | 43 | B | 73 | B | 103 | D | 133 | B |
| 14 | B | 44 | A | 74 | C | 104 | D | 134 | C |
| 15 | D | 45 | C | 75 | B | 105 | A | 135 | D |
| 16 | D | 46 | C | 76 | D | 106 | C | 136 | A |
| 17 | C | 47 | C | 77 | C | 107 | B | 137 | C |
| 18 | B | 48 | D | 78 | A | 108 | C | 138 | A |
| 19 | A | 49 | B | 79 | C | 109 | B | 139 | A |
| 20 | D | 50 | B | 80 | B | 110 | A | 140 | C |
| 21 | C | 51 | D | 81 | B | 111 | B | 141 | B |
| 22 | A | 52 | A | 82 | B | 112 | A | 142 | B |
| 23 | C | 53 | A | 83 | A | 113 | B | 143 | B |
| 24 | C | 54 | A | 84 | B | 114 | C | 144 | C |
| 25 | D | 55 | D | 85 | B | 115 | C | 145 | C |
| 26 | B,C,D | 56 | A | 86 | C | 116 | B | 146 | A |
| 27 | C | 57 | B | 87 | B | 117 | C | 147 | C |
| 28 | C | 58 | B | 88 | D | 118 | D | 148 | C |
| 29 | * | 59 | D | 89 | B | 119 | D | 149 | B |
| 30 | A,B,C,D | 60 | C | 90 | B | 120 | C | 150 | C |

* அனைத்து தேர்வர்களுக்கும் மதிப்பெண் வழங்கப்பட்டது.